بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஃல்லாஹுஃத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/03/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுஃமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த வழிகாட்டல்களின் ஒளியில் திருக்குர்ஆனுடைய அருள்கள், அந்தஸ்து, தகுதி மற்றும் மகத்துவம் குறித்து எடுத்துரைத்தல்**
*பங்களாதேஷ், பாகிஸ்தான், புர்கினோஃபாஸோ மற்றும் அல்ஜீரியா (ஆகிய நாடுகளில் வசிக்கும்) அஹ்மதிகளுக்காக துஆ செய்யுமாறு கவனமூட்டல்*

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் திருக்குர்ஆனுடைய எந்த ஞானத்தை நமக்கு வழங்கினார்களோ அல்லது தம் நூல்களிலும், வழிகாட்டல்களிலும் அந்த ஞானத்தை புரிந்து கொள்ளவும், அதன்படி செயல்படவும் எந்த வழிமுறையை எடுத்துரைத்தார்களோ அது தொடர்பாக கடந்த குத்பாக்களில் நான் கொஞ்சம் கூறினேன். திருக்குர்ஆன் ஞானத்தின் கருவூலத்தை நமக்கு வழங்குகிறது. உண்மையில், இதுதான் அடியார்களை இறைவனுடன் சந்திக்கச் செய்கின்றது. இதைத்தவிர இறைவனை அடைய வேறு வழியில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:** "திருக்குர்ஆன் இறைவனைக் காட்டக் கூடியதும், இறை வேதமும் ஆகும். இதுவன்றி, ஞானத்தின் தோட்டம் முழுமையற்றதாகும்."

ஆகவே, இந்த அடிப்படை விஷயத்தை நாம் எப்பொழுதும் நம் முன்னால் வைக்க வேண்டும். நாம் இறை நெருக்கத்தையும், அவனுடைய விருப்பத்தையும் விரும்புகிறோம் என்றால், நாம் நம்முடைய உலகையும் மறுமையையும் சரி செய்ய விரும்புகிறோம் என்றால், இவ்விஷயங்களை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். இன்னொரு விஷயத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அது என்னவென்றால், திருக்குர்ஆனுடைய ஞானத்தில் இருந்து பயன் பெறுவதற்கும் இறைவனால் அனுப்பப்பட்ட வழிகாட்டியின் தேவை உள்ளது. அவர் இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆவார்கள். அன்னார், திருக்குர்ஆனுடைய பல்வேறு அம்சங்களின் மீது எந்த அளவு ஆழமாகச் சென்று ஒளி பாய்ச்சினார்கள் என்றால், அதன் அழகைக் குறித்து தெரிவித்தார்கள் என்றால், அவற்றைக் குறித்து கடந்த இரு குத்பாக்களில் நான் கொஞ்சம் எடுத்துரைத்தேன். இந்தத் தொடர் இன்னும் தொடர்கிறது. இது

தொடர்பாக எடுத்துரைக்க பெருமளவு உள்ளடக்கங்களும் உள்ளன. இன்றும் இத்தொடரை தொடரச் செய்தவாறு திருக்குர்ஆனுடைய சிறப்புகள், அந்தஸ்து மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றை குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் எடுத்துரைப்பேன்.

**லாலா பீம் ஸீன் என்பவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், திருக்குர்ஆன் இறைவனுடைய வேதமாகும் என்பதை விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “சில நாட்களுக்கு முன் லேக்ராம் எனும் பெயருடைய ஆரியராக இருந்த ஒரு பிராமணர் காதியானில் என்னிடம் வந்தார். ‘வேத்’ இறைவனுடைய வேதமாகும்; திருக்குர்ஆன் இறை வேதம் அல்ல என்று கூறினார். நான் அவரிடம், திருக்குர்ஆன் இறைவேதமாக இருக்க நான் காண்கிறேன். ஏனெனில், அதில் இணைவைத்தல் தொடர்பான போதனையும் கிடையாது; எவ்வித அசுத்தமான போதனையும் கிடையாது. அதைப் பின்பற்றுவதால் உயிருள்ள இறைவனின் முகம் தென்படுகிறது. அற்புதங்கள் வெளிப்படுகின்றன என்று கூறினேன்.”

ஆகவே, இறை வேதமாக இருப்பதற்கு அது இணைவைத்தலில் இருந்து தூயதாக இருக்க வேண்டியதும், அதன்படி செயல்படுவதால் இறைவனுடைய முகம் தென்பட வேண்டியதும் நிபந்தனையாக உள்ளது.

இறைவனுடைய முகத்தை காட்டுவதில் திருக்குர்ஆன் எவ்வாறு தம் பங்களிப்பை ஆற்றியது என்பதை சஹாபாவின் வாழ்வில் காண முடியும். **சஹாபாவின் வாழ்வில் திருக்குர்ஆனின் போதனை ஏற்படுத்திய தாக்கம் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்டமாக இருந்தது. ஒரு பரந்த கண்ணோட்டத்தைக் கொண்டு அக்கால கட்டத்தைக் காணும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை நம்பிக்கை கொள்ளக் கூடியவர்களை.... தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு எவ்வாறு கொண்டு சென்றது என்பது நிரூபணமாகிறது...... ஒரு தூய ஆன்மாவைக் கொண்டு இறைவன் அவர்களுக்கு உதவி செய்தான்...... தம் குறைகள் மற்றும் பாவங்கள் ஆகியவற்றை உணர்ந்து கொண்டு அவற்றின் துர்நாற்றத்தை வெறுக்கும் நிலையிலேயே இருந்து விடாமல் நன்மையை நோக்கி எந்த அளவுக்கு அவர்கள் அடியெடுத்து வைத்தார்கள் என்றால், பலவீனங்களை நீக்கியது மட்டுமின்றி நன்மையில் முன்னேறிக்கொண்டே சென்றனர்...... இறைவனை திருப்திபடுத்துவதற்காக எவ்வாறான போராட்டங்களை அவர்கள் மேற்கொண்டார்கள் என்றால், அதை விட அதிகமாக மனிதனால் நினைத்துப் பார்க்கக்கூட இயலாது. இறைவழியில் தம் உயிர்களை அவர்கள் துச்சமாகக் கூட கருதவில்லை! இறுதியில் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இறைவன் அவர்களின் உள்ளங்களை பாவத்தை விட்டு முற்றிலும் வெறுக்கச் செய்தான். மேலும். நன்மையின் நேசத்தை இட்டான்.”

ஆக, இதுதான் அவர்கள் மீது ஏற்பட்ட திருக்குர்ஆனின் தாக்கமாகும். அவர்கள் நிலத்தில் இருந்து எழுந்து வானில் மின்னும் நட்சத்திரங்களாக ஆகிப் போனார்கள். அவர்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறும்போது, அவர்களில் ஒவ்வொருவரும் உங்களுக்கு வழிகாட்டியாவார் என்றார்கள்.

**திருக்குர்ஆனை பின்பற்றுவதால் மனிதன் இறைப் பண்புகளை வெளிப்படுத்துபவனாக ஆகிவிடுகின்றான். இதைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "எவர் திருக்குர்ஆனைப் பின்பற்றுபவராக இருந்து கொண்டு நேசம் மற்றும் உண்மை ஆகியவற்றை இறுதி எல்லை வரை கொண்டு செல்கிறாரோ அவர் நிழல் ரீதியாக இறைப் பண்புகளை வெளிப்படுத்துபவராக இருப்பார். இந்த அனைத்து விளைவுகளும் மிகுந்த ஆற்றல், தன்மைகளைக் கொண்ட இந்த இறை வேதமாகிய திருக்குர்ஆனில் இருப்பதை நாம் காண்கின்றோம்..... திருக்குர்ஆனில் ஓர் வலிமையான ஆற்றல் இருப்பதை நான் கண்டுள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலில் ஒரு வியத்தகு தன்மையை நான் கண்டுள்ளேன். அது என்னவென்றால், உண்மையாகப் பின்பற்றுபவர் இறைநேசர் எனும் அந்தஸ்தை அடைந்து விடுகிறார்."

**திருக்குர்ஆனுடைய சிறப்புகளைக் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "திருக்குர்ஆனுக்கு நான்கு அற்புத சிறப்புகள் உள்ளன. திருக்குர்ஆனுடைய முதல் சிறப்பு என்னவென்றால், சொல்லாற்றலும் பொருளாற்றலும் ஆகும். அது மனிதனுடைய சொல்லாற்றல் மற்றும் பொருளாற்றலை விட முற்றிலும் உயந்ததாகும். இரண்டாவது அற்புத சிறப்பு என்னவென்றால், அதில் கூறப்பட்டுள்ள அனைத்து சம்பவங்களும் உண்மையில் முன்னறிவிப்புகளாக உள்ளன. மூன்றாவது அற்புத சிறப்பு என்னவென்றால், மனித இயல்பை அதன் முழுமை வரை கொண்டு செல்வதற்கு முழுமையான வழிவகைகளை திருக்குர்ஆனின் போதனை தமக்குள் கொண்டுள்ளது. நான்காவது பெரும் அற்புத சிறப்பு என்னவென்றால், முழுமையாக பின்பற்றுபவரை அது இறைவனுக்கு அருகில் எந்த அளவு கொண்டு செல்கிறது என்றால், இறைவனுடன் உரையாடும் கண்ணியத்தை அவர் பெற்று விடுகிறார். தெளிவான அடையாளங்கள் அவர் மூலம் வெளிப்படுகின்றன...... திருக்குர்ஆன் எவ்வாறான வேதம் என்றால், அதைப் பின்பற்றுவதால் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன.... திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றக் கூடியவர் (துஆக்கள்) ஒப்புக் கொள்ளப்படும் தகுதியை பெற்று விடுகிறார். திருக்குர்ஆனின் அற்புத தாக்கங்களில் இதுவும் ஒன்று ஆகும். அவர்களுடைய துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டு இறைவன் தன் இனிய, தாக்கமிகு சொற்களினால் அவர்களுக்கு தகவலும் கொடுக்கின்றான். குறிப்பாக, எதிரிகளுக்கெதிராக அவர்களுக்கு உதவியும் செய்கின்றான்."

**திருக்குர்ஆனுடைய தாக்கங்கள் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "இறைவனுடைய மகிமை, அச்சம் ஆகியவற்றின் திட நம்பிக்கை எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்றால், அது கவனமின்மை எனும் திரையை நார் நாராக கிழித்து விட வேண்டும். உடலில் எவ்வாறான ஒரு நடுக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால், மரணத்தை மிக அருகில் காட்ட வேண்டும். உள்ளத்தில் எவ்வாறான அச்சம் மிகைக்க வேண்டும் என்றால், தீமையை தூண்டும் ஆன்மாவின் அனைத்து தொடர்புகளும் முறிந்து விட வேண்டும். ஒரு மறைவான கையினால் மனிதன் இறைவன் பக்கம் இழுத்துச் செல்லப்பட வேண்டும். அவனுடைய உள்ளம் எவ்வாறான உறுதியால் நிரம்பி விட வேண்டும் என்றால், நிச்சயமாக இறைவன் உள்ளான்; அவன் பயமற்ற

குற்றவாளிகளுக்கு தண்டனை அளிக்காமல் விடுவதில்லை என்ற உறுதி கிடைக்க வேண்டும். ஆகவே, நான் ஒவ்வொருவருக்கும் தெளிவுபடுத்த விரும்பும் விஷயம் என்னவென்றால், இந்த தேவைகளை பூர்த்தி செய்ய கூடியது திருக்குர்ஆன் ஆகும். திருக்குர்ஆனை பின்பற்றும் மனிதனுக்கு இறைவனே அதனை காட்டிக் கொடுக்கின்றான். மேலும், வானவர்களின் உலகில் அவரை உலா வரச் செய்கின்றான். **'**நான் இருக்கிறேன்**'** எனும் குரலின் மூலமாக தன் இருப்பை குறித்து அவனே அவருக்கு செய்தி அறிவிக்கின்றான்.''

**திருக்குர்ஆன் இணை வைப்பிலிருந்து இரட்சிப்பு வழங்கும் வழிமுறையாக உள்ளது என்பதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''அரேபியா, பாரசீகம், எகிப்து, சிரியா, இந்தியா, சீனா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர் முதலிய நகரங்களில் ஏகத்துவத்தின் விதையை திருக்குர்ஆன் விதைத்தது. மேலும், அநேக நகரங்களில் இருந்து சிலை வணக்கம் மற்றும் பிற படைப்புகளை வணங்கும் முறையை ஆணி வேரோடு பிடுங்கி எறிந்து விட்டது. இது எத்தகைய நடவடிக்கை என்றால், இதற்கு நிகரான ஒன்றை எந்தக் ஒரு காலத்திலும் காண முடியாது.''

**திருக்குர்ஆனுடைய போதனை உயரிய அந்தஸ்தைக் கொண்ட போதனையாகும் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''அதிகபட்ச வழிகேட்டின் போது வெளிப்பட்ட அந்த வேதத்திற்கு உயரிய போதனையின் தேவை இருந்தது! குழப்பமான கொள்கைகள் உறுதியாக குடி கொண்டு விட்ட மக்களை சீர்திருத்துவதற்காக அது வந்தது. வெறுக்கத்தக்க செயல்கள் அவர்களின் பழக்க வழக்கமாக மாறிவிட்டிருந்தன.''

**திருக்குர்ஆன் உலகளாவிய வேதமாக இருப்பது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''உலகில் மனித எண்ணிக்கை அதிகரித்த போது, சந்திப்பதற்கு வழிகள் திறந்த போது, ஒரு நாட்டில் வசிப்பவர்கள் இன்னொரு நாட்டில் வசிப்பவர்களை சந்திக்க வழிவகைகள் உண்டான போது, இன்னின்ன நிலங்களில் மனித இனம் வசிக்கிறது என தெரிய வந்த காலகட்டத்தில், இவர்கள் அனைவரையும் மீண்டும் ஒரே சமுதாயமாக ஆக்க வேண்டும் என இறைவன் நாட்டம் கொண்டான். பிரிவினைக்குப் பிறகு மீண்டும் அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என விரும்பினான். அப்பொழுது அனைத்து மக்களுக்காகவும் ஒரே வேதத்தை இறைவன் அனுப்பினான்.''

திருக்குர்ஆன் இறங்க நான்கு காரணங்கள் இருந்தன என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அவை என்னவென்றால், முதலாவதாக, இல்லத்தே ஃபாயிலீ ஆகும். அதாவது, ஒரு செயலை செய்யக் கூடியவர் யார், அதற்கான காரணங்கள் என்ன என்பதாகும். இரண்டாவதாக, இல்லத்தே சூரீ - அதாவது, அதற்கு வெளிப்படையான, செயல் ரீதியான காரணங்கள் என்ன என்பதாகும். மூன்றாவதாக, இல்லத்தே மாதீ - அதாவது, அதனுடைய உலக பயன் என்ன என்பதாகும். நான்காவதாக, இல்லத்தே ஃகாயீ - அதாவது, இவை அனைத்திற்கும் அடிப்படை காரணம் என்ன, நோக்கம் என்ன என்பதாகும். இல்லத்தே ஃபாயிலீ என்பது, الٓمّٓ **'**நானே அல்லாஹ்; அனைவரையும் விட அதிக ஞானம் உள்ளவன் ஆவேன்**'** என்பதாகும். இல்லத்தே மாதீ என்பது

ذٰلِكَ الۡكِتٰبُ ஆகும். அதாவது, இந்த வேதம் இறைவன் சார்பாக வந்துள்ளது. அவன் அனைவரையும் விட அதிக ஞானம் உள்ளவனாக இருக்கின்றான். இந்த வேதத்தின்படி செயல்படுவதால் உண்மையான பயன்களை அடைய முடியும். இல்லத்தே சூரீ என்பது لَا رَيۡبَ فِيۡهِ அதாவது, இவ்வேதத்தின் சிறப்பும் பரிபூரணமும் எதுவென்றால், இதில் எவ்வித சந்தேகமோ, ஐயமோ கிடையாது. அதில் உள்ள விஷயங்கள் உறுதியானவையும், அதன் வாதங்கள் சான்றைக் கொண்டவையாகவும், பிரகாசமானவையாகவும் உள்ளன. இவ்வேதத்தின் இல்லத்தே ஃகாயீ என்பது, هُدًى لِّلۡمُتَّقِيۡنَ ஆகும். அதாவது, இறையச்சமுடையோருக்கு வழி காட்டுவது இவ்வேதத்தின் குறிக்கோளாகும்.''

இக்காலத்தில் பெயரளவிலான ஆலிம்கள், என்றும் அழியாத திருக்குர்ஆனின் போதனைகளை எவ்வாறு எடுத்து வைத்துள்ளார்கள் என்றால், எதிரிகளுக்கு அதன் மீது திருப்பி ஆட்சேபனை செய்வதற்கு வாய்ப்பு கிடைத்து விட்டது. இன்று அஹ்மதிகளாகிய நம்முடைய பணி என்னவென்றால், நமக்குள் இறையச்சத்தை உருவாக்கியவாறு, இப்போதனையின் சிறப்புகளை நம் சொல்லின் மூலமாகவும் செயலின் மூலமாகவும் நிரூபிக்க வேண்டும். திருக்குர்ஆன்தான் அனைத்து நோய்களுக்குமான மருத்துவமாகும் என்று உலகிற்கு கூறுங்கள்! இறையச்சத்தின் படி நடந்தவாறு அதற்கேற்ப செயலாற்றுவதற்கு அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. ஆமீன்!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பங்களாதேஷ், பாகிஸ்தான், புர்கினோஃபாஸோ மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளில் வாழும் அஹ்மதிகளுக்காக துஆவுக்காக கவனமூட்டினார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்:* இப்பொழுது நான் துஆவுக்காகவும் கவனமூட்ட விரும்புகின்றேன். தற்போது பங்களாதேஷில் ஆண்டு மாநாடு நடந்து கொண்டிருக்கிறது. இன்றுதான் முதல் நாளாக இருந்தது! ஆனால், எதிரிகள் அங்கு மாநாடு நடக்கும் இடத்தில் தாக்குதல் நடத்தி விட்டார்கள். பலர் காயமுற்றும் இருக்கிறார்கள். தற்போது வரை கிடைத்த தகவலின் படி, அவர்கள் எந்த அளவு தாக்குதல் நடத்தியுள்ளார்கள் என்றால், சிலர் கடுமையாகவும் காயமுற்றிருக்கிறார்கள். அந்த பகுதியில் உள்ள அஹ்மதிகளின் வீடுகளையும் தீயிட்டுக் கொண்டிருக்கின்றனர். எவ்வளவு சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை முழுமையாக கணிக்க இயலவில்லை. அவர்களின் தீங்கிலிருந்து அஹ்மதிகளை அல்லாஹ் பாதுகாப்பானாக! அவர்களை பிடிக்கவும் ஏற்பாடு செய்வானாக! இப்போது இவர்களின் நேர்வழிக்காக துஆவும் இருக்கப் போவதில்லை.

اَللّٰهُمَّ مَزِّقْهُمْ كُلَّ مُمَزَّقٍ وَسَحِّقْهُمْ تَسْحِيْقًا

என்ற துஆதான் இவர்களுக்காக நம் நாவில் இருந்தும், உள்ளத்தில் இருந்தும் வெளிப்படுகிறது.

இவ்வாறே, பாகிஸ்தானுடைய சூழ்நிலைக்காகவும் துஆ செய்யுங்கள்! அங்கும் அல்லாஹ் அஹ்மதிகளின் நிலைகளை சரி செய்வானாக! புர்கினோஃபாஸோவிலும் ஆபத்துகள் தற்போது வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. அங்குள்ளவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்! அதேபோன்று, அல்ஜீரியாவிலும்

அஹ்மதிகளின் மீது சில வழக்குகள் உள்ளன. அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்! எல்லா இடங்களிலும் அல்லாஹ் அஹ்மதிகளை பாதுகாப்பானாக!

நான் கூறியது போன்று, பங்களாதேஷில் நிர்வாகம் நம்மிடம் கூறியது என்னவென்றால், கவலைப்படாதீர்கள்! மாநாட்டை நடத்துங்கள். நாங்கள் முழுமையாக பாதுகாப்பு தருகிறோம் என்றார்கள். ஆனால் குழப்பவாதிகளான, பயங்கரவாதிகளான, கடுமையை விரும்பக்கூடிய முல்லாக்கள் தம் கூட்டாளிகளுடன் வந்த போது, போலீசார் அங்கு நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எவ்வாறிருப்பினும், நாம் அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டும். அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும். நம் சகோதரர்களின் கஷ்டங்களை விரைவில் அல்லாஹ் நீக்குவானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)